DINAMALAR

PAGE NO : 02 DATE: 22.09.2023

# பல்கலையில் ரத்ததான முகாம்

**புதுச்சேரி, செப். 22–**
புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்குனரகம் சார்பில் ரத்ததான முகாம் நடந்தது.

துணைவேந்தர் குர்மீத் சிங் உத்தரவின்படி நடத்த முகாமை பல்கலையின் கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள் சிறப்பு அலுவலர் ராஜிவ் ஜெயின் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையின் ரத்த மாற்று மருத்துவ பிரிவின் தலைமை மருத்துவ அதிகாரி டயானா ஷர்மிளா தலைமையிலான மருத்துவ குழுவினர் ரத்தம் சேகரித்தனர். மாணவர்கள், ஊழியர்கள் ரத்ததானம் செய்தனர்.

தொலைதூர கல்வி இயக்குநர் அரவிந்த் குப்தா பேசுகையில், ரத்ததான முகாம்களில் தாமாக முன் வந்து ரத்தத்தை கொடையாக அளிக்கும் இளம் மாணவர்கள் இந்த சமூகத்தின் நம்பிக்கையின் எதிரொலியாக தெரிவதாக குறிப்பிட்டார்.

ரத்த தானம் செய்த மாணவர்கள் கவுரவிக்கப்பட்டனர்.



புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனரகம் சார்பில் ரத்ததான முகாமை, கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள் சிறப்பு அலுவலர் ராஜிவ் ஜெயின் துவக்கி வைத்தார். அருகில் தொலைதூர கல்வி இயக்குநர் அரவிந்த் குப்தா.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 22. 09. 2023

Regn. No:PONTAM/2001/5373 Postal Regn. No.PY /69 /2021-2023

# பல்கலைக்கழகத்தில் ரத்ததான முகாம்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இந்திரா காந்தி மருத்துவமனை சார்பில் ரத்ததான முகாம் நடந்தது.

புதுச்சேரி, செப். 22: புதுவை இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையுடன் இணைந்து புதுவை பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனரகம் சார்பில் ரத்ததான முகாம் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தது. முகாமை பல்கலைக்கழகத்தின் கலாச்சாரம் மற்றும் கலாச்சார உறவுகள் சிறப்பு அலுவலர் பேராசிரியர் ராஜீவ் ஜெயின் துவக்கி வைத்தார். இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையின் ரத்த மாற்று மருத்துவ பிரிவின் தலைமை மருத்துவர் அதிகாரி டாக்டர் டயானா ஷர்மிளா தலைமை தாங்கினார். தொலைதூர கல்வி இயக்குனர் பேராசிரியர் அரவிந்த் குப்தா முன்னிலை வகித்தார். இதில் பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் என அனைத்து பிரிவினரும் முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

முகாமில் ரத்த தானம் வழங்கிய மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பழச்சாறு வழங்கப்பட்டது. மேலும் அவர்கள் நிறைய திரவ உணவை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த ரத்ததான முகாம் காலையில் தொடங்கி மதிய உணவு இடைவேளை வரை நடைபெற்றது.